2022 மே 6]

கிடைப்பதற்கேற்ப, பாடத் திட்டங்களை மாற்றியமைத்து, அதை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 233, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

233—

தொழிற்பூங்கா

***12040—திருமதி க. சிவகாமசுந்தரி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியத்தில் தொழிற்பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிருஷ்ணராயபுரம் தொகுதி அடங்கிய கரூர் மாவட்டத்தில் சர்வதேச தரத்திலான ஜவுளிப் பூங்கா ஒன்றினை 200 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க நிலம் தெரிவு செய்யப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.*

திருமதி க. சிவகாமசுந்தரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி அடங்கிய கரூர் மாவட்டத்தில் இடம் தெரிவு செய்யப்பட்டு, விரைவில் தொழிற்பூங்கா அமைக்கப்படும் என்று தெரிவித்தமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதியின் பெரும்பகுதி மிகவும் வறட்சியான பகுதியாகும். கடவூர் வட்டத்தில் 23 வருவாய் கிராமங்கள் உள்ளன. இங்கு

சுமார் 1,17,000 மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் வேலைவாய்ப்பிற்கான வழிவகைகள் ஏதும் இல்லாததால், பொதுமக்கள் மற்றும் படித்த இளைஞர்கள் பிழைப்பு தேடி, சுமார் 50 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கரூர், திண்டுக்கல், திருச்சி, வேடசந்தூர் போன்ற நகரங்களுக்குச் சென்று தினக்கூலியாக வேலைபார்த்து வருகின்றனர். எனவே, இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்வகையில், கடவூர் வட்டப் பகுதியான தரங்கம்பட்டியில் புதிய தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்திலுள்ள கிருஷ்ணராயபுரம் தொகுதி, மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருக்கக்கூடிய காரணத்தினால்தான், கடந்த முறை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரினுடைய பரிந்துரையின் அடிப்படையில், அவர்கள் வலியுறுத்தியதன்பேரில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த இடத்திலே ஒரு புதிய தொழிற்பூங்கா அமைப்பதற்கான அனுமதியினை வழங்கினார்கள். SIPCOT மூலமாக அமையவிருக்கின்ற அந்தத் தொழிற்பூங்காவில், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய பலருக்கும் வேலைவாய்ப்புகளை நிறைவான வகையிலே உருவாக்குவதற்காகத்தான் ஒரு புதிய ஜவுளிப் பூங்கா–Textile Park-ஐ உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. எனவே, அது அமைகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல, கடவூர் வட்டாரப் பகுதியிலே இருக்கக்கூடிய பொதுமக்கள், அங்கே வேலைவாய்ப்பை நாடக்கூடியவர்கள் நிறைவான வகையிலே வேலைவாய்ப்பினைப் பெறக்கூடிய சூழல் நிச்சயமாக உருவாகும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.*

திருமதி க. சிவகாமசுந்தரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத்

2022 மே 6]

தெரிவித்துக்கொள்கிறேன். தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், வெள்ளியணை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் மிகவும் வறட்சியான பகுதிகளாகும். இங்கு வசிக்கும் மக்கள் வேலைக்காக தினந்தோறும் கரூர் வந்து செல்கின்றனர். இப்பகுதியில் புதிய சிமென்ட் ஆலை அமைத்துத் தர அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய சிமென்ட் ஆலைகளை அமைக்கக்கூடிய உத்தேசம் அரசிற்கு தற்போது ஏதுமில்லை. தனியார் நிறுவனத்தினர் முன்வரக்கூடிய சூழ்நிலை உருவானால், அதற்கான உரிய சுற்றுச்சூழல் அனுமதி உள்ளிட்ட அனுமதிகளைப் பெற்று, அதற்கான மூலப்பொருட்கள், உற்பத்தி போன்றவற்றையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு அவர்கள் முன்வந்தால், அரசாங்கம் Guidance Tamil Nadu மூலமாக அவர்களுக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன் அவர்கள்.

திரு. G.V. மார்க்கண்டேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, மதுரையிலிருந்து தூத்துக்குடி செல்கின்ற Industrial Corridor பகுதியில் அமைந்திருக்கிறது. ஏறக்குறைய 60 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலை அமைந்திருக்கிற அந்தப் பகுதியில், எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லாத நிலை உள்ளது. எனவே, அனைத்து மக்களும் பயன்பெறுகிற அளவிற்கு விளாத்திகுளம் தொகுதியில், ஓர் உணவு பதப்படுத்துகிற தொழிற்பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை–தூத்துக்குடி* Industrial Corridor, *தமிழ்நாடு முதலமைச்சராக மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருந்த காலத்திலே, அவருடைய கனவுத் திட்டமாக உருவாக்கப்பட்டது. அதற்குப் பிறகு, ஒரு* Special Purpose Vehicle *என்கின்ற வகையிலே ஒரு நிறுவனம் துவக்கப்பட்டாலும்கூட நீண்டகாலமாகச் செயல்படாத நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, அந்த* Corridor*–க்கு ஒரு புத்துயிரை ஊட்டியிருக்கிறார்கள்.*

முற்பகல் 10–25

தூத்துக்குடியில் பல முக்கியமான நிறுவனங்கள் இன்றைக்கு வர இருக்கின்றன. 'Furniture Park'*–க்காக இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விளாத்திகுளம் தொகுதியிலேயே சிப்காட் மூலமாக நிலம் எடுக்கும் பணியும் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அது ஒரு முக்கியமான தொழில் வழித்தடம் என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. எனவே, அவர் விரும்பியவாறு அந்த இடத்திலே* 'Food Park' *அமைக்கக்கூடிய வசதிகள் உருவாகும்பட்சத்தில் விளாத்திகுளம் பகுதியை நிச்சயமாக அரசு முன்னுரிமை அடிப்படையில் கருத்தில்கொள்ளும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *ஜெயக்குமார் அவர்கள்.*

திரு. S. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் 2,500 ஏக்கர் பரப்பளவில் சிறப்பாக இயங்கி வருகின்றது. கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னால், 60–க்கு 40 என்ற அளவில் 200 கட்டடங்கள் தயாராக இருந்தும், அவை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வராமல் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவற்றைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 மே 6]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் நிறுவனத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய பெருந்துறை சிப்காட் ஒரு முக்கியமான தொழில் வளாகம் என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல அங்கு தொழில்மனைகள் பயன்பாட்டிற்கு வராமல் இருக்கிறதா, கட்டி வைத்திருக்கிறார்களா என்பது குறித்து அரசாங்க உயரதிகாரிகளோடு உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். நான் குறிப்பிட்டதைப்போல, இப்போது பல்வேறு நிறுவனங்கள்* Plug and Play model *வருவதற்கு ஆர்வம் காட்டுகிறார்கள். அப்படித் தயார் நிலையில் இருந்தால், அதனை அப்படியே* occupy *செய்து தொழிலைச் செய்யலாம். அவ்வாறு பயன்படுத்தக்கூடிய நிலையில் இருந்தால், நிச்சயமாக அரசு அதனைப் பரிசீலிக்கும். உரிய அதிகாரிகளைக் கொண்டு விசாரித்து, உடனடியாக அதனைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.*

டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சிப்காட் தொழிற்சாலையில், ஏறத்தாழ 209 தொழிற்சாலைகள் இயங்கி வந்தன. கடந்த பத்தாண்டுகளில் அவை நலிவடைந்து, தற்போது வெறும் 50 தொழிற்சாலைகள் மட்டுமே இயங்கி வருகின்றன. வானம் பார்த்த பூமியான புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளும் தண்ணீர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்குள்ள படித்த இளைஞர்கள் வேலைக்காக வெளி மாவட்டங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும், வெளி நாட்டிற்கும் செல்லும் நிலை உள்ளது. இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக இருக்கும் தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டம் கடைநிலையில் உள்ளது. தொழில் துறையில் சரித்திரம் படைத்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழியில் செயல்பட்டு வரும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை சிப்காட் தொழிற்சாலையை மேம்படுத்த ஆவன செய்ய வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளைச் செய்து, தொழில் முனையக்கூடிய வாய்ப்புகளைத் தேடி வரக்கூடியவர்களுக்கு, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய இத்தகைய தொழிற்பூங்காக்களை நாங்கள் காட்டுகிறோம். இத்தகைய தொழில் வளர்ச்சி சமச்சீரான வகையில் தமிழ்நாடு முழுவதும் அமைய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு அறிவுரைகள் வழங்கியிருக்கிறார்கள். குறிப்பிட்ட பகுதியில் மாத்திரமில்லாமல் அது எல்லா இடங்களிலும் இருக்க வேண்டுமென்பதை அவர்கள் குறிப்பாக வலியுறுத்தியிருக்கின்றார்கள். ஆகவே, தொழில்முனைவோர்கள், தொழில் முதலீடு செய்யக்கூடியவர்களுக்கு எல்லா இடங்களையும் காட்டுகிறோம். அவர்கள் விரும்புகிற இடங்களை அவர்கள் தேர்வு செய்கிறார்கள்.*

தொழிலைப் பொறுத்தவரையில், திருச்சிராப்பள்ளி மிக வளர்ந்து வரக்கூடிய ஒரு தொழில் நகரமாக இருக்கிறது. அதனை நீங்கள் நன்றாக அறிவீர்கள். இப்போது பாதுகாப்புத் துறை சம்பந்தமான தொழில்கள் அங்கே அதிகளவில் வர இருக்கக்கூடிய நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்திருக்கக்கூடிய இந்த சிப்காட் தொழில் வளாகத்திலும் அதிகளவில் தொழில்கள் வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நாங்கள் கனிவோடு கவனத்தில் கொண்டு, அத்தகைய தொழில் முதலீடுகள் வருகிறபோது புதுக்கோட்டை மாவட்டத்தில், நிச்சயமாக அவர்களுக்கு ஒரு வாய்ப்பினை உருவாக்கக்கூடிய வகையில் நாங்கள் வழிகாட்டுவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 234, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

234—

தார்ச் சாலை

***3415—திரு. தி. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—